# பொதுக்காலம் 33ஆம் வாரம் - ஞாயிறு

# மூன்றாம் ஆண்டு

## திருப்பலி முன்னுரை

மன உறுதியோடு இருந்து வாழ்வை காத்துக்கொள்ளுங்கள் என்பதை வலியுறுத்தும் பொதுக்காலம் முப்பத்து மூன்றாம் ஞாயிறு திருப்பலி கொண்டாட்டத்திற்கு அன்புடன் அழைக்கின்றோம்.

வாழ்வில் பிறப்பு முதல் இறப்பு வரை கவலைகள் மறைத்துக் கொண்டிருந்தாலும், 'காலங்கள் அவருடையன, யுகங்களும் அவருடையன' என்ற ஆண்டவரின் வாக்கு நம்முள் நம்பிக்கை ஒளியை ஏற்றுகின்றது. இவ்வொளி நம் மனதினுள் தூண்டப்பட்டு மன உறுதியுடன் ஆண்டவரின் நாளுக்காக விழிப்பாய் இருக்க நம்மைத் தகுதிப்படுத்துவோ.

இன்றைய முதல் வாசகத்தில், "என் பெயருக்கு அஞ்சி நடக்கிற உங்கள்மேல் நீதியின் சூரியன் உதிக்கும்" என்ற நல் வாக்கைத் தருகிறார் இறைவாக்கினர் மலாக்கி. இறுதி நாளில் என்ன நடக்கும் என்பதைக் கூறுகிறார். கொடுமை செய்வோர் அனைவரும் சருகாவர். ஆனால் அவரது பெயருக்கு அஞ்சுபவர் மேல் நீதியின் சூரியன் உதிக்கும் என்ற ஆசீர்வாதத்தைப் பொழிகின்றார்.

இன்றைய நற்செய்தி வாசகத்தில் உலக அச்சுறுத்தல்களின் போதும் நீங்கள் உறுதியோடு இருங்கள் என்கிறார் இயேசு. உலகத்தின் போக்கு குறித்த கவலைகளும் பயமும் இயேசுவின் காலத்தில் மட்டுமல்ல, இன்றைய சூழலிலும் அரங்கேறிக் கொண்டுதான் இருக்கின்றது. அனைத்து வழிகளிலிருந்தும் பூமியின் அழிவு பற்றி ஆய்வுகள் அறிவியல் பூர்வமாக முன்வைக்கப்பட்டாலும், நம்பிக்கையை எவரும் தருவதில்லை. எனவே போலி தீர்க்கதரிசிகளை கண்டோ, சப்தமிட்டு பேசி செபிக்கிறவர்களை கண்டோ கலங்காதீர்கள்; திடங்கொள்ளுங்கள். இயேசுவில் ஆழமான நம்பிக்கை கொண்டு இவ்வுலகை ஜெயிப்போம் என்ற விசுவாசத்தோடு இப்பலியில் பங்கேற்போம்.

## மன்றாட்டுக்கள்

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. நாவன்மையையும் ஞானத்தையும் கொடுப்பேன் என்றவரே எம் இறைவா!

எம் திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் மற்றும் துறவறத்தார் அனைவரும் உமது ஞானத்தைப் பெற்று நாவினால் நற்செய்தியை அறிவிக்கவும், போலித் தீர்க்கதரிசிகள் பற்றிய விழிப்புணர்வை மக்கள் மனதில் ஏற்படுத்தி, இயற்கையோடு இணைந்து, மக்களை வழிநடத்த ஞானம் தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம்.

2. மன உறுதியோடு வாழ கற்றுக்கொள்ளுங்கள் என்றவரே எம் இறைவா!

எம் நாட்டை வழிநடத்தும் ஆட்சியாளர்கள், அதிகாரிகள் நாட்டை அமைதியின் பாதையில் வழிநடத்தவும் நாட்டு மக்களின் மீது வரிச்சுமையை சுமத்தாமல், நாடு நலமும் வளமும் பெறுவதில் மட்டுமே அக்கறை கொள்ளும் வரம் அருள வேண்டும் என உம்மை மன்றாடுகின்றோம்.

3. என் பெயருக்கு அஞ்சி நடங்கள் என்றவரே எம் இறைவா!

அன்றாட வாழ்வில் மேற்கொள்ளும் சவால்கள், போராட்டங்களினால் இறைப் பாதையில் இருந்து விலகிச் செல்லாமலும் வேலைப்பளுவில் எதிர்காலத்தை இழக்காமலும், இறைவனுக்கு அஞ்சி நலம் தரும் செயல்களை செய்ய வரம் அருள வேண்டும் என உம்மை மன்றாடுகின்றோம்.

4. நலன்களின் நாயகனே எம் இறைவா!

எம் பகுதியில் போதிய பருவ கால சூழ்நிலையைத் தந்து வேளாண்மை சிறப்படையும், நீர்நிலைகள் மாசடையாமல் பேணப்பட்டு முறையாக பயன்படுத்தப்படவும், இயற்கையோடு இணைந்து வாழ்வை நடத்தவும், குடும்ப அமைதி, மகிழ்ச்சி பெருகவும், கல்வி, வேலைவாய்ப்பு, திருமணம், குழந்தை வரம் வேண்டுவோர் உமது அருளால் பெற்ற மகிழவும் வேண்டுமென்று உம்மை கெஞ்சி மன்றாடுகின்றோம்.

**நன்றி: ஆசிரியை. திருமதி. ஜோஸ்பின் சாந்தா லாரன்ஸ், பாவூர்சத்திரம்.**

**“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 843 802 1938; www.arulvakku.com